**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 303/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW–3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திலீப் | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | மதியழகன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனது பெரியப்பா மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும், எனது பெரியம்மா தங்கபுஷ்பம் என்பவருக்கும் இடப்பிரச்சனை இருந்தது. 06.07.2021 ம் தேதி, காலையிலிருந்தே பாதை பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளும், எனது பெரியம்மாவும் சண்டை போட்டு அடிக்க போனார்கள். மாலை 04.30 மணிக்கு மண்பாதையில் வைத்து நானும், எனது அண்ணன் அ.சா.1 ஜெயக்குமாரும் நின்று கொண்டிருந்தோம். அப்போது, எதிரிகள் அனைவரும் வந்து எங்களைப் பார்த்து "தேவடியா மவனே" என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். அப்போது, நானும், எனது அண்ணனும் "எதற்காக இப்படி அசிங்கமாக பேசுகிறீர்கள்" என்று கேட்டோம். அப்போது, எதிரி அருள்முருகன் எங்களைப் பார்த்து "அப்படித் தான் பேசுவோம்" என்று சொல்லி, அரிவாளை எடுத்து எனது அண்ணனின் இடது கையில் வெட்டி விட்டார். நான் தடுக்க போனபோது,

எனது இடது கையில் எதிரி அருள்முருகன் அரிவாளால் வெட்டினார். பின்னர், ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கு நானும், எனது அண்ணனும் சென்றோம். அங்கு முதலுதவி எடுத்து விட்டு, தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டு, மேல்சிகிச்சைக்காக இரண்டு பேரும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 அரிவாளால் தான் எதிரி சம்பவத்தின் போது என்னையும், எனது அண்ணனையும் வெட்டினார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.07.22 19:53:02 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 303/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | சவுந்தரராஜன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனது உடன்பிறந்த அண்ணன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளின் இடத்துப்பக்கம் எங்களுக்கும் இடம் உள்ளது. அந்த இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. 06.07.2021ம் தேதி, காலையிலிருந்தே பிரச்சனை நடந்து கொண்டிருந்தது. மாலை சுமார் 04.00 மணியளவில் எங்கள் வீட்டு பக்கமுள்ள எங்களது இடத்து பக்கம் வைத்து எனது அண்ணன் ஜெயக்குமார் காலையிலிருந்தே நடந்த பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளிடம் கேட்க போனபோது, எதிரிகள் எனது அண்ணனிடம் "நீ எதற்கு இங்கு வந்தாய், உனக்கு இதில் என்ன சம்பந்தம், தேவடியா மவனே" என்று அசிங்கமாக அருள்முருகன் பேசினார். அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே அருள்முருகன் அரிவாளை எடுத்துக் கொண்டு வந்து, "இத்தோடு நீ ஒழி" என்று சொல்லி, அரிவாளால் கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். அதை எனது அண்ணன் தடுத்ததால் இடது

கையில் வெட்டு பட்டது. அப்போது பக்கத்தில் நின்று கொண்டிருந்த திலீப் தடுக்கப்போனபோது, திலீப்பின் இடது கையிலும் அரிவாளால் அருள்முருகன் வெட்டினார். நானும், எனது மனைவி அனிதா ஆகியோர்கள் பதற்றத்தில கத்தினோம். அதன் பின்னர் எதிரி அருள்முருகன் அரிவாளை ஓங்கி காண்பித்து விட்டு அவரது வீட்டிற்கு சென்று விட்டார். அதன் பின்னர் காயம்பட்ட இருவரையும் நானும், எனது அம்மா மற்றும் திலீப்பின் அம்மா ஆகியோர்கள் த்துமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக இரண்டு பேரையும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.22 19:53:08 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அனிதா | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | முத்தையா | தொழில் | : | பீடி சுற்றுதல் |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அத்தான். அ.சா.4 ராஜேஷ் எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அத்தைக்கும், எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 06.07.2021ம் தேதி, மாலை சுமார் 04.30 மணியளவில் எனது அத்தை தங்கபுஷ்பம் வீட்டின் அருகிலுள்ள சின்டெக்ஸ் டேங்க் பக்கம் வைத்து எனது அத்தான் ஜெயக்குமாரும், திலீப் என்பவரும் எதிரிகளிடம் "எதற்காக சித்தியிடம் வம்புக்கு இழுக்கிறாய், கெட்ட கெட்ட வார்த்தைகளால் பேசுகிறாய்" என்று கேட்டார்கள். அப்போது, எதிரிகள் அனைவரும் ஜெயக்குமார், திலீப் ஆகியோர்களை பார்த்து "நீ எதற்காக இந்த பிரச்சனைக்கு வருகிறாய் தேவடியா மவனே" என்று பேசினார்கள். அப்போது, நானும், எனது கணவரும் போகும் போது "என்னிடம் வம்புக்கு இழுத்தால் வெட்டி விடுவேன்" என்று சொல்லிக்கொண்டேயிருக்கும் போது, தகராறு ஏற்பட்டு எதிரிகள் ஜெயக்குமாரை பிடித்து கொள்ள, எதிரி அருள்முருகன்

அரிவாளால் ஜெயக்குமாரின் இடது கையில் வெட்டினார். எதிரி லிங்குசாமி திலீப்பை பிடித்து கொள்ள எதிரி அருள்முருகன் அரிவாளால் இடது கையில் முழங்கைக்கு அருகில் வெட்டினார். அதன் பின்னர், பெரிய பிரச்சனை ஏற்பட்டது. அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் வந்து விட்டார்கள். படுகாயம் ஆனதால், காயம்பட்ட இருவரையும் ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அதன் பின்னர், தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக இரண்டு பேரையும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.22 19:53:14 +0530